පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක : 487
ආයතනයේ නම : ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 487
நிறுவன்த்தின் பெயர்: இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளும் மற்றும் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Series No : 487
Name of the institution: Human Rights Commission of Sri Lanka
Submission of observations of the Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

විනිසුරු එල්.ටී.බී.දෙහිදෙණිය
ශ්‍රේෂ්ඨාධිකරණ විනිසුරු (විශ්‍රාමික)
සභාපති
ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව

பாராளுமன்ற குறிப்பு எண் : 487

நிறுவனத்தின் பெயர் : இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

| குழுவின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் | பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை |
|---|---|
| **<u>இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 21.11.2023 அன்று நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் தொடர்பான குழுக்கூட்டத்தில் கலந்துகொள்ள மறுத்தமை.</u>**<br><br>பொது நிறுவனங்களுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியானது, சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்ட முறை மற்றும் அவை அடைந்த செயலாற்றுகை என்பவற்றைப் புலனாய்வு செய்வதே பொதுக் கணக்குக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள முதன்மையான பணியாகுமென கௌரவ தவிசாளர் தெரிவித்தார். அரசாங்கக் கணக்குகள் தொடர்பான குழுவின் முகாமைத்துவத் தகவல் அமைப்பின் (MIS) மூலம் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மிகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளதாகவும், வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதில் மிகவும் மோசமான நிலையிலுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குழுவின் முன்னிலையில் தெரிவித்தார்.<br><br>அதன் அடிப்படையிலேயே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை 21.11.2023 ஆம் திகதி அரசாங்கக் கணக்குக் குழுவின் முன்னிலையில் அழைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டதாக தவிசாளர் தெரிவித்தார். அன்றைய தினம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 2023.11.27 அன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கக் கணக்குகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டது. எதிர்காலத்திலும் தேவையெனில் கலந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

Justice L.T.B.Dehideniya
Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka

| | |
|---|---|
| கூட்டத்தில் பங்கேற்க மறுத்ததால், கௌரவ சபாநாயகரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேற்படி ஆணைக்குழுவை மீள அழைக்கும் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டதாக தவிசாளர் தெரிவித்தார். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை அழைக்கும் அதிகாரம் அரசாங்கக் கணக்குக் குழுவுக்கு உள்ளதா என்பது குறித்து ஆணைக்குழு உறுப்பினர்கள் நீண்ட நேரம் கலந்துரையாடியதாகவும், இணக்கப்பாடு எட்டப்படாததால் மேலும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கும் வரை 21.11.2023 ஆம் திகதி அரசாங்கக் கணக்குக் குழுவின் முன்னிலையில் ஆஜராகப் போவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். அது தொடர்பில் ஏதேனும் அசௌகரியம் ஏற்பட்டிருந்தால் குழுவிடம் தங்களது வருத்தத்தைத் தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். | |
| 02.<br>**<u>இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப் பொறுப்புக்கள்</u>**<br><br>அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மக்களின் அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதான பணியாகுமென ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார். எந்தவொரு குடிமகனும் அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முடியும் என்பதுடன், விசாரணை அலுவலரின் பூர்வாங்க விசாரணையின் பின்னர் உண்மையிலேயே அடிப்படை உரிமை மீறல் இடம்பெற்றுள்ளதாக முகத்தோற்றளவில் (Prima facie) தோன்றும் பட்சத்தில், அத்தகைய முறைப்பாடுகள் தமது ஆணைக்குழுவினால் | இங்கு குறிப்பிடப்பட்டுள்ளபடி, இவ்வாணைக்குழு அந்தப் பொறுப்பை அதே முறையில் நிறைவேற்றி வருகிறது. |

Justice [illegible]
Judge of the Supreme Court [illegible]
Chairman
Human Rights Commission of Sri Lanka

| | |
|---|---|
| ஏற்றுக்கொள்ளப்படுமெனச் செயலாளர் தெரிவித்துள்ளார்.<br><br>பின்னர், முறைப்பாட்டுத் தரப்பினரையும் பிரதிவாதித் தரப்பினரையும் அழைத்து முறைப்பாட்டை விசாரித்து, இணக்கப்பாடு காண முடியாத சந்தர்ப்பங்களில் விசாரணை அலுவலர்கள் ஆணைக்குழுவுக்கு விதப்புரைகளை முன்வைப்பதாகவும், ஆணைக்குழுவினால் மேற்படி விதப்புரைகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், அவ்வாறு மேற்படி விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், கௌரவ ஜனாதிபதியிடம் அறிக்கையிடப்படும் அல்லது வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்துள்ளார்.<br><br>கைது செய்யப்பட்டவர் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தில் இருக்கின்றாரா என்பதை உறுதிப்படுத்துதல், சித்திரவதைகளில் இருந்து தடுத்தல், உறவினர்களைச் சந்திப்பதற்கு வாய்ப்பளித்தல், தாமதமின்றி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற செயல்களில் தொடர்ச்சியாகத் தலையிடுவதனால், மக்களிடையே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மீது நம்பிக்கையும் மரியாதையும் கட்டியெழுப்பப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். | |

Justice L.T.B. D...
Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka

03.

**<u>இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்/நபர்கள் செயற்படுத்தத் தவறியமை தொடர்பான அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தல்.</u>**

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 15 (8) ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகளை உரிய நிறுவனங்கள் அல்லது நபர்கள் செயற்படுத்தத் தவறியமை தொடர்பான அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், அவ்வாறானதொரு அறிக்கை பல ஆண்டுகளாக ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படாதது குறித்து குழு கேள்வி எழுப்பியது.

ஆணைக்குழுவிற்குப் பெறப்படும் முறைப்பாடுகளுடன் தொடர்புடைய சம்பவங்கள் மீதான நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவுறாமை, முறைப்பாட்டாளர் தரப்பிலிருந்தும் பிரதிவாதிகள் தரப்பிலிருந்தும் தேவையான ஒத்துழைப்புக் கிடைக்காமை மற்றும் இணக்கம் காணப்பட்ட சம்பவங்கள் மீண்டும் தலைதூக்குவது போன்ற பல்வேறு காரணங்களால் விசாரணைகளை முடிப்பதில் ஏற்பட்ட தாமதத்தின் விளைவாகவே, 2011 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஜனாதிபதியிடம் இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியாமல் போயுள்ளதாகச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமல்படுத்தப்படாதது தொடர்பாக தொடர்ச்சியான கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. அதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினரை மீண்டும் அழைத்து கலந்துரையாடல்களை நடத்துவதன் மூலம் பரிந்துரைகளை அமல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், பரிந்துரைகள் தொடர்ந்து அமல்படுத்தப்படாத நிலை குறித்து ஜனாதிபதிக்கு அறிக்கைகள் அனுப்பும் நடவடிக்கையும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

Justice L.T.B.Dehideniya
Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka

| 04. பதவி வெற்றிடங்களை நிரப்புதல் | தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் கீழ், கணிசமான எண்ணிக்கையிலான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் நிலவும் காலிப்பணியிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் நோக்கில், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டுள்ளது. அந்த அனுமதி கிடைத்தவுடன் காலிப்பணியிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை, ஆட்சேர்ப்பு நடைமுறைகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் திருத்தப்பட்ட மாதிரிகளுக்கு ஏற்ப மறுசீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள தேவையான ஆரம்பகட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.<br><br>மேலும், உயர்மட்ட முகாமைத்துவ நிலைகளில் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் போது கீழ்க்கண்ட தடைகள் நிலவுகின்றன என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன்.<br><br>i. செயலாளர் பதவியைப் பற்றிய நீதிமன்ற வழக்கு தற்போது நிலுவையில் இருப்பதால், அந்தப் பதவிக்கு நிரந்தர அதிகாரியை நியமிக்க முடியாமல் உள்ளது.<br><br>ii. சில உயர்மட்ட பதவிகளுக்காக பொது செய்தித்தாள்கள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தாலும், தகுதியான விண்ணப்பதாரர்கள் மிகக் குறைந்த அளவில் மட்டுமே விண்ணப்பிப்பது கவனிக்கப்பட்டுள்ளது. மேலும், அவர்கள் நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்களும் பல சந்தர்ப்பங்களில் 50 மதிப்பெண்களைத் தாண்டாததாக இருந்துள்ளது. இதனால், அந்தப் பதவிகளுக்குத் தேவையான தகுதியுடைய நபர்கள் விண்ணப்பிக்காததும் இந்நிலைக்குக் காரணமாக அமைந்துள்ளது. |
|---|---|
| அவதானிப்புகள்/ பரிந்துரைகள்<br><br>ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கடந்துள்ள போதிலும், மேல்மட்ட முகாமைத்துவப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை தொடர்பாகக் குழு கவனம் செலுத்தியது. இவ்விடயம் தொடர்பாக மீண்டும் மீளாய்வு செய்து, பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யக்கூடிய வகையில் ஆட்சேர்ப்பு நடைமுறையில் (Scheme of Recruitment - SoR) திருத்தம் செய்யப்பட வேண்டுமெனக் குழு பரிந்துரைத்தது.<br><br>இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஊழியர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதில் காணப்படும் தாமதம் தொடர்பாகக் கவனம் செலுத்திய குழுவானது, அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் அமைப்பின் (Cadre) பிரகாரம் இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வது தொடர்பாக, காலக்கெடு (Timeline) அடங்கிய அறிக்கையொன்றை 2023 டிசம்பர் மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னதாகக் குழுவிற்குச் சமர்ப்பிக்க வேண்டுமென அதன் பிரதான கணக்கீட்டு அலுவலருக்குப் பரிந்துரைத்தது. | |

Justice L.T.B.Dehideniya
Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka

| | |
|---|---|
| 05.<br><br>**<u>வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் முகாமைத்துவக் குழு அமர்வுகளை நடத்தாமை.</u>**<br><br>1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டிய வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை தொடர்பாகவும், 2017 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமர்வுகளை நடத்தாமை தொடர்பாகவும் குழு கேள்வி எழுப்பியிருந்தது.<br><br>2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான வருடாந்த அறிக்கைகள் 2022.03.30 ஆம் திகதியன்றும், 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை 2023.01.31 ஆம் திகதியன்றும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கணக்கீட்டு அலுவலர் (க.அ), மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இல்லாத காரணத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமர்வுகளை நடத்த முடியாமல் போனதாகவும் குறிப்பிட்டார்.<br><br>**பரிந்துரைகள்:** உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இல்லாமை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமர்வுகளை நடத்துவதற்கு இடையூறாக அமையாது என்பதைச் சுட்டிக்காட்டிய குழு, கணக்காளரை இணைத்துக்கொண்டு உடனடியாக உரிய முறையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமர்வுகளை நடத்துமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கணக்கீட்டு அலுவலருக்குப் | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தற்போதைய பொறுப்புகள் மற்றும் பணிச்சுமையுடன் ஒப்பிடுகையில், பணியாளர்கள் எண்ணிக்கை மிகவும் வரையறுக்கப்பட்டதாக இருப்பதால், அவர்களின் அன்றாட கடமைகளுடன் சேர்த்து சிறப்பு பணிகளையும் நிறைவேற்றுவது கடினமானதாக உள்ளது. மற்ற அரச நிறுவனங்களில் வருடாந்திர அறிக்கைகள் போன்றவற்றை தயாரிப்பதற்காக திட்டமிடல் பிரிவு அல்லது திட்டமிடல் அதிகாரி இருப்பினும், இவ்வாணைக்குழுவில் அத்தகைய மனிதவளம் இல்லாத நிலையில், அன்றாட பணிகளுடன் இணைந்து பயிற்சியாளர்கள் மற்றும் பிற தற்காலிக உதவியாளர்களின் ஒத்துழைப்புடன் மிகவும் சிரமமாக இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br><br>எனினும், தற்போது 2023 ஆம் ஆண்டுக்கான அறிக்கை ஆணைக்குழுவின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்திர அறிக்கைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.<br><br>உள்துறை கணக்காய்வாளர் நியமிக்கப்பட்ட பின்னர், 2023 ஆம் ஆண்டிற்கான முதல் கூட்டம் நடத்தப்பட்டது. 2025 ஆம் ஆண்டிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட முறையின்படி கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. |

Justice L.T.B.Dehideniya
Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka

| | |
|---|---|
| பரிந்துரைத்தது. | |
| 06.<br><br><u>தரவுகள் கட்டமைப்பை இற்றைப்படுத்தல்.</u><br><br>ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட முறைப்பாடு முகாமைத்துவ தரவுக் கட்டமைப்பும் UNDP நிறுவனத்தினால் அன்பளிப்பு செய்யப்பட்ட முழுமையான அறிக்கைகளைப் பெறக்கூடிய தரவுக் கட்டமைப்பும் இற்றைப்படுத்தப்படாமை தொடர்பாகக் குழு வினவியது.<br><br>மேற்படி இரண்டு தரவுக் கட்டமைப்புகளிலும் எவ்விதப் பிரச்சினைகளும் காணப்படவில்லை எனவும், ஆயினும் அவற்றை உரிய முறையில் செயற்படுத்துவதற்குத் தேவையான கணினிகள், ஸ்கேனர்கள் போன்ற உபகரணங்கள் மற்றும் பணியாட் தொகுதியில் தட்டுப்பாடு நிலவுவதோடு, தகவல்களைப் பதிவிடுவதிலும் குறைபாடுகள் காணப்படுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.<br><br>பரிந்துரைகள்:<br><br>கூடுதல் முன்னுரிமை அளித்து, குறித்த தரவுக் கட்டமைப்புகளை இற்றைப்படுத்திச் செயல்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தான அறிக்கையினை இரண்டு வாரங்களுக்குள் (2023.12.11 ஆம் திகதிக்கு முன்னதாக) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பிரதியுடன் கூடியதாகக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு கணக்கீட்டு அலுவலருக்குக் குழு பணிப்புரை | மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தரவு அமைப்பு 2023 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கப்படாமல் இருந்தது தொடர்பாக வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், தேவையான கணினி உபகரணங்கள் மற்றும் பிற சாதனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மேலும், நீண்டகாலமாக காலியாக இருந்த பணியிடங்களில் கணிசமான அளவு அதிகாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். இன்னும் நிலவும் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டு, அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br><br>தற்போது, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தரவு அமைப்பு புதுப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>Justice L.T.B.Dehideniya |

Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka

| | |
|---|---|
| வழங்கியது.<br><br>மேற்குறிப்பிட்டவாறு பிராந்திய அலுவலகங்களுக்கும் தலைமை அலுவலகத்தின் தரவுக் கட்டமைப்புக்குமிடையே உரிய ஒருங்கிணைப்பு காணப்படுகின்றதா என்பதை அவதானிக்குமாறு குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவுறுத்தல் வழங்கியது.<br><br>மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தரவுக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாகக் கூடிய விரைவில் திறைசேரியுடன் முறையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, இந்த ஆண்டின் மூலதனச் செலவுகளுக்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் மூலம், தரவுக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்குத் தேவையான கணினிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குழு கணக்கீட்டு அலுவலருக்குப் பணிப்புரை வழங்கியது. | |
| 07.<br><br>__இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள் செயற்படுத்தப்படாத சந்தர்ப்பங்களின் சதவீதம் மிக உயர் மட்டத்தில் காணப்படுகின்றமை.__<br><br>ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகளைச் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நடைமுறைப்படுத்தாமை தொடர்பாகத் தொடர் ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நிறுவப்பட்டுள்ள | மனித உரிமைகள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமல்படுத்தப்படாதது தொடர்பாக தொடர்ச்சியான கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினரை மீண்டும் அழைத்து கலந்துரையாடல்கள் நடத்துவதன் மூலம் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், பரிந்துரைகள் தொடர்ந்து அமல்படுத்தப்படாத நிலை குறித்து ஜனாதிபதிக்கு அறிக்கைகள் அனுப்பும் நடவடிக்கையும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

Justice L.T.B.Dehideniya
Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka

"நடைமுறைப்படுத்தப்படாத விதப்புரைகளை மேற்பார்வை செய்வதற்கான பிரிவு" வலுவூட்டப்பட வேண்டும் எனக் குழு சுட்டிக்காட்டியது. அதற்கு மேலதிகமாக, நடைமுறைப்படுத்தப்படாத விதப்புரைகள் தொடர்பாக 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையினை, காலாண்டுக்கு ஒரு முறை (Quarterly) சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் குழு கணக்கீட்டு அலுவலருக்குப் பணிப்புரை விடுத்தது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சில பரிந்துரைகள் நடைமுறை ரீதியாகச் செயற்படுத்த முடியாமல் போனமைக்குக் கீழ்க்காணும் காரணங்கள் தாக்கம் செலுத்தியுள்ளன எனக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டது:

1. சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதப்புரைகள், சுற்றுநிருபங்களில் (Circulars) உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் அவ்விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிறுவனத்தின் உள்ளக விதிகளுக்கு இசைந்தொழுகாமை (Non-conformity).
2. ஏற்புடைய தரப்புகளுக்கு முறையாக விதப்புரைகள் ஆற்றுப்படுத்தப்படாமை (Not being referred properly).
3. ஒரே சம்பவம் தொடர்பாக இணையாக (Parallel) விசாரணைகளை மேற்கொள்கின்ற வெவ்வேறு நிறுவனங்களின் தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றமை.

ஜனாதிபதிக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ள புகார்களுடன் தொடர்புடைய எண்கள் மற்றும் தேதிகள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

| | புகார் எண் | அறிக்கை அனுப்பப்பட்ட தேதி |
|---|---|---|
| 1. | HRC/BD/215/22 | 2024.01.18 |
| 2. | HRC/K/015/21 | 2024.08.05 |
| 3. | HRC/1392/13 | 2025.01.29 |
| 4. | HRC/4835/23 | 2025.01.29 |
| 5. | HRC/3845/13 | 2025.06.16 |
| 6. | HRC/2964/15 | 2026.01.27 |
| 7. | HRC/2873/23 | 2026.04.06 |
| 8. | HRC/2037/25 | 2026.04.06 |
| 9. | HRC/KND/192/22 | 2026.04.06 |
| 10. | HRC/3511/24 | 2026.04.06 |

Justice L.T.B.De[illegible]
Judge of the Supreme Cou[illegible]
Chairman
Human Rights Commission of Sri Lanka

08.

<u>மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டல்.</u>

08. ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பாக மக்களை அறிவுறுத்துவதற்கு ஆணைக்குழு செயற்படுத்துகின்ற வேலைத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டுமெனக் குழு சுட்டிக்காட்டியது. ஒரே சம்பவம் தொடர்பாக மக்கள் பல்வேறு நிறுவனங்களிடம் முறைப்பாடு செய்வதற்கு முதன்மைக் காரணம், அவர்களின் விழிப்புணர்வின்மையே (Lack of awareness) என்பது குழுவின் அபிப்பிராயமாக இருந்தது. மக்களை அறிவுறுத்துவதற்குப் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்த கணக்கீட்டு அலுவலர், அதன் பிரகாரம் மக்களிடமிருந்து கடிதங்கள், தொலைநகல்கள் (Fax), மின்னஞ்சல்கள் மற்றும் நேரடியாக ஒப்படைக்கப்படும் கடிதங்கள் மூலம் ஏராளமான முறைப்பாடுகள் கிடைப்பதாகக் குறிப்பிட்டார்.

அதற்கு மேலதிகமாக, வெகுஜன ஊடகங்கள் மூலம் சுட்டிக்காட்டப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக முறைப்பாடு எதுவும் இல்லாத நிலையிலும், தானாக முன்வந்து விசாரிக்கும் அதிகாரம் (*On its own motion / Suo motu*) மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆவது பிரிவின் மூலம் தமது ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கணக்கீட்டு அலுவலர் குழுவிற்குத் தெரிவித்தார். ஆண்டொன்றில் பொதுவாக அவ்வாறான 20 முதல் 25 விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் சிறுவர் இல்லங்கள், மனநல மருத்துவமனைகள், பொலிஸ்

ஆணைக்குழுவின் சுயமுயற்சியின்பேரில் 2023 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 23 சம்பவங்கள் தொடர்பாக புகார் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில், இதுவரை 10 புகார்களுக்கான விசாரணைப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும், 13 புகார்கள் தற்போது விசாரணையில் உள்ளன.

விசாரணைப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள புகார்களின் எண்கள் பின்வருமாறு உள்ளன.

1. HRC/SUO/MOTU/01/23
2. HRC/SUO/MOTU/02/23
3. HRC/SUO/MOTU/09/23
4. HRC/SUO/MOTU/10/23
5. HRC/SUO/MOTU/11/23
6. HRC/SUO/MOTU/12/23
7. HRC/SUO/MOTU/13/23
8. HRC/SUO/MOTU/14/23
9. HRC/SUO/MOTU/15/23
10. HRC/SUO/MOTU/22/23

மனித உரிமைகள் ஆணைக்குழுவால் 2023 ஆம் ஆண்டில் 653 காவல் நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், சிறைச்சாலைகள் மற்றும் பிற தடுப்பு/காவல் நிலையங்களில் 86 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு மேலாக, 2024 மற்றும் 2025 ஆண்டுகளில் காவல் நிலையங்கள், சிறைச்சாலைகள் மற்றும் பிற தடுப்பு/காவல் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கைகள் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட காவல் நிலையங்களின் எண்ணிக்கை: 2455

2024 ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட சிறைச்சாலைகள் மற்றும் பிற தடுப்பு/காவல் நிலையங்களின் எண்ணிக்கை: 149

2025 ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட

Justice L.T.B. Dehideniya
Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka

| | |
|---|---|
| நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகள் போன்ற நிறுவனங்களைக் கண்காணிப்பதற்கான (Inspections) வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.<br><br>**பரிந்துரைகள்:** கடந்த ஆண்டில் பாதிக்கப்பட்ட தரப்பினரிடமிருந்து முறைப்பாடு எதுவுமின்றி, ஊடகங்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் யாவை?, அவற்றின் எண்ணிக்கை எவ்வளவு?, அவற்றின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு (Field inspection) நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்றை 2024.01.24 ஆம் திகதியன்று குழு மீண்டும் கூட்டப்படும்போது சமர்ப்பிக்குமாறு குழு கணக்கீட்டு அலுவலருக்குப் பரிந்துரைத்தது. | காவல் நிலையங்களின் எண்ணிக்கை: 2161<br><br>2025 ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட சிறைச்சாலைகள் மற்றும் பிற தடுப்பு/காவல் நிலையங்களின் எண்ணிக்கை: 148 |

Justice L.T.B.Dehideniya
Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka

| | |
|---|---|
| 09.<br><br>**<u>விசாரிக்கப்படாத முறைப்பாடுகள் பரிந்துரைகள்</u>**<br><br>மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விசாரிக்கப்படாத ஏராளமான முறைப்பாடுகள் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டிய குழுவானது, அந்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான வேலைத்திட்டம் (Action plan) தொடர்பான அறிக்கையினை 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னதாகக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கணக்கீட்டு அலுவலருக்கு உத்தரவிட்டது.. | மனித உரிமைகள் ஆணைக்குழுவில் விசாரணை செய்யப்படாத புகார்களை விசாரணை செய்வதற்காக, காலியாக இருந்த பதவிகளுக்கு மனித உரிமை அதிகாரிகள் மற்றும் சட்ட அதிகாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, அவர்களிடையே புகார் கோப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டு விசாரணை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. UNDP திட்டத்தின் கீழ் அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்தாலும், அந்தத் திட்டம் செயல்படுத்தப்படாததால் அந்த ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படவில்லை.<br><br>2023 ஆம் ஆண்டளவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய காலம் இருந்த புகார்களின் எண்ணிக்கைக்கு மேலாக, ஆண்டுதோறும் சுமார் 9000-10000 புகார்கள் தலைமை அலுவலகத்திற்கும் பிராந்திய அலுவலகங்களுக்கும் கிடைக்கின்றன. அவற்றில் சுமார் அதே அளவிலான புகார்கள் ஆண்டுக்குள் நிறைவு செய்யப்படுகின்றன. இதனால் கடந்த ஆண்டுகளில் நிலுவையில் இருந்த புகார்கள் முடிவுறுத்தப்பட்டாலும், புதிய புகார்கள் தொடர்ந்து கிடைப்பதால் விசாரணைக்கு உள்ள புகார்களின் எண்ணிக்கையை குறைப்பது நடைமுறையில் கடினமாகியுள்ளது.<br><br>தற்போது, ஒரு மனித உரிமை அதிகாரிக்கு 12 புகார்களையும், ஒரு சட்ட அதிகாரிக்கு 18 புகார்களையும் முடிக்க வேண்டும் என்ற இலக்கு வழங்கப்பட்டிருந்தாலும், அந்த இலக்குகளை நிறைவேற்றினாலும் கூட, தற்போதைய பணியாளர் எண்ணிக்கையுடன் ஆண்டுதோறும் வரும் அனைத்து புகார்களையும் முழுமையாக முடிக்க முடியாத நிலை உள்ளது. எனவே, புகார் விசாரணைகளை விரைவுபடுத்த பணியாளர் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது. அதற்காக நிலவும் காலிப்பணியிடங்களை நிரப்புவதும், பணியாளர் எண்ணிக்கையை அங்கீகரிக்க பெறுவதும் தொடர்பான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

Justice L.T.B.Dehideniya
Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka